بسم الله الرحمن الرحيم

# ஜுமுஆ பேருரை

*அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்*

*(அய்யதஹுஅல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் - அல்லாஹ் தனது வல்லமைமிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)*

*பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 27.03.2015 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்*

---

தஷஹ்ஹுத், தஅவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் தனது வருகையின் நோக்கத்தை நிறைவு செய்வதற்காக எந்த ஐந்து கிளைகளை பயன்படுத்த வேண்டும் என்று கூறியிருந்தார்களோ அவற்றுள் ஒன்று பிரசுரங்களை வெளியிடுவதாகும். அதாவது தப்லீக் செய்வதற்காகவும், அத்தாட்சிகளை நிறைவு செய்வதற்காகவும் பிரசுரங்களை வெளியிடுவதாகும். ஓரிடத்தில் அன்னார் கூறுகின்றார்கள்:

இன்று நான் அத்தாட்சிகளை நிறைவு செய்வதற்காக எதிரிகள் மற்றும் மறுப்பவர்களை அழைத்து இந்த பிரசுரத்தை வெளியிட வேண்டும் என்று எண்ணியுள்ளேன். அதன் மூலமாக மறுமை நாளன்று ஏக இறைவனின் முன்னால் நான் எந்த நோக்கத்திற்காக அனுப்பப்பட்டேனோ அதை நான் நிறைவேற்றி விட்டேன் என்பது நிரூபிக்கப்பட்டுவிடும்.

இது சில பிரசுரங்கள் மட்டுமல்ல. ஒன்றிரண்டு முறை வெளியிடப்பட்டது மட்டுமல்ல. மாறாக, அன்னார் மரணமடையும் வரை எண்ணற்ற பிரசுரங்களை அன்னார் வெளியிட்டிருந்தார்கள். வெளியிடப்பட்ட அனைத்து பிரசுரங்களையும் பார்ப்பதாக இருந்தால் மார்க்க உலகில் இது ஒரு கருவூலமாக திகழ்கிறது. முஸ்லிம்களையும், கிருஸ்தவர்களையும், ஏனைய மதத்தைச் சார்ந்தவர்களையும் அவர்கள் அழிந்து போவதிலிருந்தும் அவர்களை காப்பாற்ற வேண்டும் என்ற துடிப்பு அவர்களிடம் இருந்தது. அவர்கள் தனியாகவே இந்த பணியை செய்து வந்தார்கள். இதற்காக அவர்கள் கடுமையாக உழைத்தும் வந்தார்கள். அவர்கள் எழுதிய பெரும் பெரும் நூல்கள் ஒரு பக்கம் இருந்தாலும் படைப்பினங்களுக்காக அவர்களிடம் இருந்த அனுதாப உணர்வானது சிறிய பிரசுரங்கள் மூலமாகவும் உலகை சீர்திருத்த வேண்டும் என்ற அவர்களது வேதனையை வெளிப்படுத்துகின்றது. உலகை சீர்திருத்துவதற்காக அவர்களுக்கு இருந்த இந்த வேதனையை நிலை நிறுத்துவதும் அந்த பணியை தொடர்ந்து செய்து வருவதும் அவர்களது ஜமாஅத்தைச் சார்ந்தவர்களின் கடமையாக இருக்கின்றது. எனவே இதன் பக்கம் கவனம் செலுத்தி வர வேண்டும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் இந்த பணி தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுக்கு இருந்த வேதனையையும் வழக்கத்திற்கு மாற்றமாக இதற்காக அவர்கள் உழைத்ததையும் பற்றி குறிப்பிட்டவாறு ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உதாரணம் நம் முன்னால் இருக்கின்றது. நோய்வாய்ப்பட்டிருந்தும் கூட இரவு பகலாக இந்த பணியில் ஈடுபட்டு வந்தார்கள். ஒரு பிரசுரத்திற்கு அடுத்து இன்னொரு பிரசுரத்தை வெளியிட்டுக் கொண்டே இருந்தார்கள். மக்கள் அவர்களது பணிகளைப் பார்த்து வியப்படைவார்கள். ஒரு பிரசுரத்தை வெளியிடுவார்கள். அதன் தாக்கம் தணிந்திருக்காது. அதன் காரணமாக எதிர்ப்பில் வேகம் ஏற்பட்டிருக்கும். அதுவும் குறைந்திருக்காது. அதே சமயத்தில் அவர்கள் இரண்டாவது பிரசுரத்தை வெளியிட்டிருப்பார்கள். எதுவரை என்றால் சிலர் இதுபோன்ற தருணங்களில் பிரசுரங்களை வெளியிடுவது மக்களது இயல்புகளில் தீய தாக்கத்தை ஏற்படுத்தும் என்று கூறினார்கள். ஆனால் அவர்கள் அதை பொருட்படுத்தவே இல்லை.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: இரும்பு சூடாக இருக்கும் போது தான் அதை உடைக்க முடியும். வேகம் சிறிது குளிர்ந்து விட்டாலும் உடனடியாக அவர்கள் இன்னொரு பிரசுரத்தை வெளியிடுவார்கள். இதன் காரணமாக எதிர்ப்பின் கூச்சல் ஏற்படும். அவர்கள் இரவு பகலாக இவ்வாறே பணி புரிந்து வந்தார்கள். இதுவே வெற்றியின் வழியாகும். நாமும் இந்த வழிமுறையைக் கடைபிடித்தால் வெற்றி பெற முடியும். எதிர்ப்பு குறையட்டும் என்று எண்ணக்கூடாது. எதிர்ப்பு இருந்து கொண்டே இருக்கட்டும். அத்துடன் பிரசுரங்களையும் வெளியிட்டுக் கொண்டே இருக்க வேண்டும். அப்போது தான் தாக்கம் ஏற்படும்.

மூன்று அல்லது நான்கு வருடங்களுக்கு முன்னால் நான் ஜமாஅத்களுக்கு நீங்கள் ஒன்றிரண்டு பக்கங்களில் பிரசுரங்களை வெளியிட்டு தப்லீக் பணியை செய்யுங்கள் என்று கூறியிருந்தேன். மேலும் அதற்கான இலக்கையும் நான் நிர்ணயித்திருந்தேன். அந்த பிரசுரங்கள் இலட்சக்கணக்கில் வெளியிடப்பட வேண்டும். அதன் மூலமாக இஸ்லாத்தின் அழகிய போதனை உலகிற்கு தெரிய வர வேண்டும். உலகத்திற்கு இஸ்லாத்தின் உண்மை என்ன என்பது தெரிய வேண்டும். மேலும் இந்த காலத்தில் அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை அனுப்பி மீண்டும் இஸ்லாத்தை மறுமலர்ச்சி அடையச் செய்து அதன் உண்மையான போதனைகளை நீடிக்கச் செய்திருக்கின்றான் என்பது உலகிற்கு தெரிய வர வேண்டும் என்று கூறியிருந்தேன். இப்போதும் தனது அடியார்களை ஷய்த்தானின் பிடியிலிருந்து காப்பாற்றுவதற்காக அவன் தனது தூதர்களை அனுப்புகின்றான் என்பதும் உலகிற்கு தெரிய வேண்டும் என்று கூறி இருந்தேன். எவ்வாறிருப்பினும் எந்த ஜமாஅத்துகள் நான் கூறியதற்கேற்ப பணியாற்றி இருந்ததோ அங்கு சாதகமான விளைவுகள் வெளிப்பட்டிருக்கின்றன.

ஜாமிஆவிலுள்ள மாணவர்களை நான் ஸ்பெய்னிற்கு அனுப்பி இருந்தேன். அங்கு அவர்கள் பெரும் பணியாற்றி இருந்தார்கள். ஏறக்குறை மூன்று இலட்சம் பல்வேறு பிரசுரங்களைஅவர்கள் விநியோகம் செய்திருந்தார்கள். இவ்வாறே கனடாவிலுள்ள ஜாமிஆ அஹ்மதிய்யாவின் மாணவர்கள் இப்போது ஸ்பேனிஷ் நாடுகளிலும், மெக்ஸிகோவிலும் சென்று இந்த பிரசுரங்களை விநியோகம் செய்தார்கள். அல்லாஹ்வின் அருளால் இதனால் தப்லீக்கின் களமும் மிகவும் விரிவடைந்து

விட்டது. பைஅத்களும் நடைபெற்றுள்ளன. பெரும் பெரும் புத்தகங்களை வெளியிடுவதற்கு பகரமாக ஒன்று அல்லது இரண்டு பக்கங்களை கொண்ட பிரசுரங்கள் ஒன்றிற்கு பின் இன்னொன்று வெளியிடப்பட்டுக் கொண்டே இருக்க வேண்டும். அவை விநியோகம் செய்யப்பட்டுக் கொண்டே இருக்க வேண்டும்.

சஹாபாக்கள் தொடர்பாகவும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தொடர்பாகவும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறியுள்ள பல்வேறு மேற்கோள்களை இப்போது உங்கள் முன்னால் நான் எடுத்துக் கூறுகின்றேன்.

ஓரிடத்தில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறியுள்ளார்கள். ஆப்கானிஸ்தானில் ஷஹீதானவர்களின் மீது கற்கள் விழுந்தன. அவர்கள் அதைக் கண்டு பயந்து விடவில்லை. மாறாக, கொள்கையில் உறுதியுடனும், தைரியத்துடனும் அவர்கள் அதனை ஏற்றுக் கொண்டனர். அதிகமாக கற்கள் விழுந்த போது ஹஸ்ரத் சாஹிப் சாதா அப்துல் லதீஃப் சாஹிப் ஷஹீது அவர்களும், நிஃமதுல்லாஹ் கான் சாஹிப் அவர்களும், மற்ற ஷஹீதுகளும், இறைவா! இந்த மக்கள் மீது கருணை காட்டுவாயாக. இவர்களுக்கு நேர்வழியைக் காட்டுவாயாக என்றே கூறினர். விஷயம் என்னவென்றால், பேரன்பின் உணர்வு மனிதரிடம் இருக்கும் போது அவரது நிலைமையே மாறி விடுகிறது. அவரது பேச்சுக்களில் தாக்கம் உருவாகி விடுகிறது. அவரது முகத்திலுள்ள ஒளிமயமான ஒளிக்கதிர்கள் மக்களது கவனத்தை ஈர்த்து விடுகின்றது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். எனக்கு நினைவில் இருக்கின்றது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது காலத்தில் இங்கு அதாவது காதியானில் ஆயிரக்கணக்கான மக்கள் வந்தனர். அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களைப் பார்த்த போது இந்த முகம் ஒரு பொய்யருடைய முகமாக இருக்க முடியாது என்றே கூறினர். அந்த மக்கள் அன்னாரது நாவிலிருந்து ஒரு சொல்லைக் கூட கேட்கவில்லை. ஆனால் அன்னார் மீது அவர்கள் நம்பிக்கை கொண்டனர். இப்படிப்பட்ட உதாரணங்கள் இன்றும் நமக்குத் தெரிய வருகின்றன. பல கடிதங்களும் வருகின்றன. அதில் இவ்வாறு குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அதாவது நாங்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது புகைப்படத்தை பார்த்ததுமே இது ஒரு பொய்யருடைய முகமாக இருக்க முடியாது என்று கூறி பைஅத் செய்து கொண்டதாக கூறுகின்றனர்.

பிறகு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறினார்கள். அதாவது மூன்று வகையான மக்கள் நமது ஜமாஅத்தில் உள்ளனர்.

ஒரு பிரிவினர் எனது வாதத்தைக் கேட்டு அதை சிந்தித்துப் பார்த்து அஹ்மதிகளாக ஆகி விட்டனர். எனது வருகையின் நோக்கம் என்ன என்பது பற்றி அவர்களுக்குத் தெரியும். எவ்வாறு முன்னுள்ள நபிமார்களின் ஜமாஅத்கள் தியாகங்கள் செய்தனரோ அவ்வாறே நாமும் தியாகங்கள் செய்ய வேண்டும் என்பதை அவர்கள் புரிந்திருந்தனர். ஆனால் இன்னொரு பிரிவினர் உள்ளனர். அவர்கள் ஹஸ்ரத் மவ்லவி நூருத்தீன் சாஹிப் அவர்களை மட்டும் காரணமாக வைத்து ஜமாஅத்தில் இணைந்துள்ளனர். அவர்களுக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வருகையின் நோக்கம் பற்றி எதுவும் தெரியாது. ஹஸ்ரத் மவ்லவி நூருத்தீன் சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் பைஅத் செய்திருந்தார்கள் என்பதனால் மட்டும் அவர்களும் ஜமாஅத்தை ஏற்றுக் கொண்டனர்.

இவர்களைத் தவிர மூன்றாவது பிரிவினர் சில இளைஞர்களைக் கொண்டதாகும். அந்த இளைஞர்களின் உள்ளத்தில் முஸ்லிம்களுக்காக வேதனை இருந்தது. ஆனால் மார்க்க அளவிலோ, சமுதாய அளவிலோ முஸ்லிம்கள் ஒரு கூட்டமாக இருக்க வேண்டும் என்ற எந்த உணர்வும், வேதனையும் அவர்களுக்கு இருக்கவில்லை. ஆனால் முஸ்லிம்களின் நிலைமையைப் பார்த்து முஸ்லிம்கள் ஒரு கூட்டமாக இருக்க வேண்டும் என்பதை மட்டும் அவர்கள் விரும்பினர். இத்தகைய மக்களும் ஜமாஅத்தில் இணைந்தனர். பிறகு மார்க்கம் தொடர்பாகவே இங்கு அதிகம் வழியுறுத்தப்படுகிறது என்பதை அறிந்ததும் இவர்களில் பலரும் தனியாக விலகிச் சென்று விட்டனர்.

சமுதாய அளவில் நாம் ஒன்றாக இருக்க வேண்டும் என்றே அவர்கள் விரும்புகின்றனர். இவ்வாறு சமுதாய அளவில் அவர்கள் பணி செய்ய விரும்புகின்றனர். ஆனால் முஸ்லிம் பொது மக்களை ஒரு குழுவாக இவர்களால் உருவாக்க முடியாமல் இருப்பதால் இவர்கள் நாம் ஒரு கூட்டமாக இருப்பதைப் பார்த்ததும் அவர்கள் நம்முடன் வந்து சேர்ந்து கொண்டனர். இப்போது அவர்கள் மதரஸாக்கள் நிறுவப்பட வேண்டும். மக்கள் பட்டங்களைப் பெற வேண்டும் என்று அவர்கள் விரும்புகின்றனர். இதன் காரணமாகவே அவர்கள் நமது ஜமாஅத்தை ஒரு அஞ்சுமனாக கருதுகின்றனர். அதனை மார்க்கமாக அவர்கள் கருதுவதில்லை. உலகில் முன்னேறுதற்காக மக்கள் புரிந்துள்ள வழிமுறைகள் முற்றிலும் வேறானதாகும். மார்க்கத்தில் முன்னேறுவதற்காக கருதப்படுகின்ற வழிமுறைகள் முற்றிலும் வேறானதாகும். அஞ்சுமன்கள் வேறு விதத்தில் முன்னேறுகின்றன. மார்க்கம் வேறு விதத்தில் முன்னேறுகின்றது. மார்க்கம் முன்னேறுவதற்கு ஒழுக்கத்தை சரிசெய்வது அவசியமாகும். ஒழுக்கம் உயர்வானதாக இருக்க வேண்டும். தியாகம் மற்றும் அர்ப்பணிக்கும் தன்மை உருவாகி இருக்க வேண்டும். தொழுகைகளை நிறைவேற்ற வேண்டும். அதன் மூலம் ஆன்மீகத்தில் முன்னேற்றம் ஏற்படும். நோன்புகள் வைக்க வேண்டும். அல்லாஹ்வின் மீது நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். அவனுக்கு கட்டுப்பட்டு நடப்பதற்கும், கீழ்ப்படிந்து நடப்பதற்கும் உறுதிமொழி எடுக்க வேண்டும்.

நாம் இந்த எல்லா விஷயங்களையும் செய்தால் உலகின் பார்வையில் நாம் பைத்தியக்காரர்களாக இருப்போம். ஆனால் இறைவனின் பார்வையில் நம்மை விட அறிவாளியாக வேறு எவரும் இருக்க முடியாது. எனவே, எல்லாவிதமான உயர்வான நல்லொழுக்கம், ஆன்மீகத்தில் முன்னேற்றம் ஆகிய இவ்விஷயங்கள் மார்க்க ஜமாஅத்துகளில் இருக்க வேண்டும். எனவே, ஒவ்வொரு அஹ்மதியும் தனது நேர்மையின் தரத்தையும், ஆன்மீகத்தின் தரத்தையும் மிகவும் உயர்த்த வேண்டிய தேவை இருக்கின்றது.

பிறகு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் தஃலீமுல் இஸ்லாம் உயர்நிலைப் பள்ளி உருவாகியதன் பிண்ணனி தொடர்பாகவும், அதன் தேவை தொடர்பாகவும் ஒரு சம்பவத்தை இவ்வாறு கூறுகின்றார்கள்.

ஒரு காலம் இருந்தது. தஃலீமுல் இஸ்லாம் கல்லூரி தொடங்கப்பட்ட போது இவ்வளவு இலட்ச ரூபாய் நமக்கு உடனடியாக தேவைப்படுகிறது. அப்போது உயர் நிலை வகுப்புகளை நடத்துவதே நமக்கு சிரமமாக இருந்தது. இங்கு ஆரியர்களின் ஒரு மிடில் ஸ்கூல் இருந்து வந்தது. அதாவது காதியானில் இருந்து வந்தது. ஆரம்ப நாட்களில் நமது மாணவர்கள் அங்கு செல்ல ஆரம்பித்தனர். அப்போது ஆரிய ஆசிரியர்கள் அவர்கள் முன்னால் சொற்பொழிவாற்ற ஆரம்பித்தனர். அதில் நீங்கள் மாமிசம் சாப்பிடக் கூடாது என்று கூறினர். அவர்கள் மாமிசம் சாப்பிடுவதில்லை. ஏனென்றால் மாமிசம் உண்பது அநீதியான செயல் என்று அவர்கள் கருதினர். இதுபோன்ற ஆட்சேபனைகளை அவர்கள் செய்து வந்தனர். அது இஸ்லாத்தின் மீது அவர்கள் நடத்திய தாக்குதலாக இருந்தது. மாணவர்கள் பள்ளிக்கூடத்திலிருந்து வந்து இந்த ஆட்சேபனைகளைப் பற்றி கூறி வந்தனர்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். இங்கு காதியானில் ஒரு பிரைமரி ஸ்கூல் இருந்தது. இந்த அரசாங்க பிரைமரி ஸ்கூலில் படிப்பதற்காக முதல் நாள் நான் அங்கு சென்ற போது மதியம் எனக்கு உணவு அனுப்பப்பட்டு இருந்தது. நான் பள்ளிக் கூடத்திலிருந்து வெளியேறி அருகிலிருந்த ஒரு மரத்தடியில் உணவு உண்பதற்காக சென்றேன். அந்த நாளில் ஈரல் சமைக்கப்பட்டிருந்தது. அப்போது மியான் அப்துல்லாஹ் சாஹிப் அவர்களின் தந்தையாரான மர்ஹூம் மியான் உமருத்தீன் சாஹிப் அவர்களும் அதே ஸ்கூலில் தான் படித்து வந்தார்கள். நான் சாப்பிடுவதற்காக அமர்ந்த போது அவரும் வந்து அமர்ந்தார். அவர் என்னைப் பார்த்து இறைச்சியா சாப்பிடுகின்றீர்கள் ? என்று கேட்டார். ஆனால் அவரோ முஸ்லிமாக இருந்தார். இதற்கு காரணம் ஆரிய ஆசிரியர்கள் மாமிசம் உண்பது அநீதியான செயலாகும். தீய செயலாகும் என்று கற்றுக் கொடுத்திருந்தனர். இறைச்சி என்ற சொல்லை முதல் முறையாக நான் அவரிடம் இருந்து கேட்டேன். அவர் மாஸையா சாப்பிடுகின்றீர்கள் என்று வினவினார். ஆனால் மாஸ் என்றால் அது இறைச்சி தான் என்று என்னால் புரிந்து கொள்ள முடியாமல் இருந்தது. நான் அவர் கூறியதை கேட்டு விட்டு இது மாஸ் அல்ல. இது ஈரலாகும் என்று கூறினேன். அதற்கு அவர் மாஸ் என்ற சொல் மாமிசத்திற்குத் தான் கூறப்படுகிறது என்று கூறினார். நான் மாஸ் என்ற சொல்லை முதல் முறையாக அவருடைய நாவிலிருந்து கேட்டேன். மாமிசம் சாப்பிடுவது தீய செயலாக இருக்கின்றது. அதிலிருந்து தவிர்ந்திருக்க வேண்டும் என்ற விதத்தில் அவர் கூறுவதை நான் கேட்டேன்.

முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். 1944 ல் நான் கல்லூரிக்கான அடித்தளத்தை நிறுவினேன். ஏனென்றால் இப்போது நமது சந்ததியினர் நமது கைகளால் உயர்வான கல்வியை பெறவேண்டிய அந்த நேரம் வந்திருந்தது. ஒருகாலம் இருந்தது. அப்போது நமது ஜமாஅத்தில் மிக சிறிய பொறுப்பில் உள்ளவர்களும் மிக குறைந்த வருமானத்தை உடையவர்களும் இணைந்திருந்தனர். இதனால் ஜமாஅத்தின் வரலாறு பற்றியும் தெரிய வருகின்றது. கல்லூரியில் படித்த சிலரும் அஹ்மதிகளாக ஆனார்கள். ஆனால் அது ஒரு விபத்து என்ற விதத்திலேயே கருதப்பட்டது. உயர்வான தகுதியில் இருப்பவர்களும் அதிக வருமானம் உள்ளவர்களும் நமது ஜமாஅத்தில் இருக்கவில்லை. குறிப்பிட்ட ஒரு சில மக்கள் மட்டும் இவ்வாறு இருந்தனர். வேறு எந்த பெரிய பதவியில் இருப்பவரும் நமது ஜமாஅத்தில் இணையவில்லை. எதுவரை என்றால் ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் ஒரு முறை என்னிடம், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது உண்மைக்கு ஒரு ஆதாரமாகும். நமது ஜமாஅத்தில் எந்தவொரு பெரிய மனிதரும் இணையவில்லை. எந்தவொரு E.A.C யும் நமது ஜமாஅத்தில் இணையவில்லை என்று கூறி வந்தார்கள். அந்த காலத்தைப் பொறுத்தவரை அவர் மிகப்பெரும் மனிதராக கருதப்பட்டார்.

முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். இப்போது இதே E.S.C கள் தெருக்களில் திரிகின்றனர். இவர்களை எவரும் ஏறெடுத்துக் கூட பார்ப்பதில்லை. ஆனால் ஒரு சமயத்தில் பெரும் துறையைச் சார்ந்தவர்கள் நமது ஜமாஅத்தில் அறவே இல்லாமல் இருந்தனர்.

ஆனால் இன்றோ உலகில் நூற்றுக்கணக்கான ஜமாஅத்தின் பள்ளிக்கூடங்களும், கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இன்று இறைவனின் அருளால் உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து பெரும் பெரும் திறமை பெற்றவர்களும், உயர் அதிகாரிகளும் நமது ஜமாஅத்தில் இணைந்துள்ளனர். நாட்டின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அஹ்மதிகளாக இருக்கின்றனர். அவர்கள் உலகவாதிகளாக இருக்கவில்லை. கலப்பற்ற மனத்தூய்மையில் அவர்கள் முன்னேறி உள்ளனர். இன்னும் சொல்வதென்றால் ஆப்ரிக்காவில் சில நாடுகளில் சில முக்கிய அமைச்சகங்களில் கூட அஹ்மதிகள் அமைச்சர்களாக இருக்கின்றனர். அல்லாஹ்வின் அருள்களில் இதுவும் ஒரு அருளாகும். அல்லாஹ் நமக்கு எவ்வாறு முன்னேற்றத்தை வழங்கிக் கொண்டு இருக்கின்றான் என்று நாம் பார்க்கின்றோம்.

ஆரம்பகால அஹ்மதிகளின் மீது இழைக்கப்பட்ட கொடுமைகள் பற்றி குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். ஒரு காலம் இருந்தது. அப்போது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மீது நாலாபுறத்திலிருந்தும் கடுமையாக நடந்து கொள்ளப்பட்டது. இது மிகவும் ஆரம்பகால நிலைமையாகும். மவ்லவிகள் அஹ்மதிகளை கொலை செய்வது, அவர்களது பொருள்களை கொள்ளையடிப்பது, அவர்களது சொத்துக்களை அபகரித்துக் கொள்வது, அஹ்மதி பெண்களுக்கு தலாக் கொடுக்கப்படாத நிலையிலேயே வேறு இடத்தில் திருமணம் செய்து வைப்பது ஆகியவை ஆகுமானது மட்டுமல்ல. மாறாக, அவை நற்கூலிக்கு உரியதாகும் என்று ஃபத்வா (மார்க்கத் தீர்ப்பு) வழங்கியிருந்தனர். அவர்கள் மீது மிகவும் கடுமை காட்டப்பட்டது. திருமணம் செய்யாமலேயே பெண்களை தங்களுக்கு ஆகுமானவர்களாக ஆக்கிக் கொண்டனர். அஹ்மதி வீடுகளிலிருந்து அவர்களை தலாக் செய்ய வைத்து தாமே அவர்களை திருமணம் செய்து கொண்டனர். அஹ்மதிகள் வீடுகளிலிருந்து வெளியேற்றப்பட்டனர். வேலைகளிலிருந்து அகற்றப்பட்டனர். அவர்களது

சொத்துக்கள் வலுக்கட்டாயமாக அபகரிக்கப்பட்டன. பல மக்களும் இந்த சண்டைகளிலிருந்து இரட்சிப்பை பெறுவதற்கான எந்தவொரு வழி பற்றியும் தெரியாமல் இடம் பெயர்ந்து செல்ல ஆரம்பித்தனர். அவர்கள் ஹிஜ்ரத் செய்கின்ற இடமாக காதியான் தான் இருந்தது.

சுருக்கமாக, மனித சக்திக்கு அப்பாற்பட்ட பெரும் சுமை இருந்து வந்தது. உதயமாகின்ற ஒவ்வொரு காலையும் புதிய புதிய சோதனையையும், புதிய பொறுப்புகளையும் கொண்டு வந்தது. அவ்வாறே ஒவ்வொரு மாலைப் பொழுதும் புதிய புதிய சோதனைகளையும், புதிய பொறுப்புகளையும் கொண்டு வரக்கூடியதாக இருந்தது. ஆனால், أَلَيْسَ اللّٰهُ بِكَافٍ عَبْدَهٗ (இறைவன் தன் அடியார்களுக்கு போதுமானவன் அல்லவா **? (39:33)** என்ற தென்றல் காற்றானது எல்லா கவலைகளையும் புற்பூண்டுகள் போன்று தூக்கி எறிந்து விட்டது. ஜமாஅத்தின் ஆரம்பகால கட்டிடங்களின் அடித்தளங்களை பிடிங்கி எறிந்து விடுவதாக மிரட்டல் விடுத்த அந்த மேகங்கள் சில நேரத்திற்குள் கருணை மற்றும் அருளின் மேகங்களாக ஆகிவிட்டன. அதிலிருந்து ஒவ்வொரு துளி விழுகின்ற போதும் அதிலிருந்தும் أَلَيْسَ اللّٰهُ بِكَافٍ عَبْدَهٗ என்ற தைரியம் ஊட்டக்கூடிய குரல் எழுந்தது. அதாவது இவ்வளவு கடுமை காட்டப்பட்ட பிறகும் கூட அல்லாஹ் நமக்கு போதுமானவனாக இருப்பான் என்ற உறுதி அந்த மக்களிடம் இருந்தது. நிலைமைகள் மாறும் இன்ஷா அல்லாஹ் என்று அவர்கள் நம்பி இருந்தனர்.

சில துன்பங்கள் நேர்ந்தாலும் கூட أَلَيْسَ اللّٰهُ بِكَافٍ عَبْدَهٗ என்ற குரல் இன்றும் நமக்கு ஆதரவாக நிற்கின்றது. உலகின் ஒவ்வொரு மூலையிலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது லங்கர் (உணவகம்) நிறுவப்பட்டு விட்டது.

எனவே அல்லாஹ் நம்மை ஒருபோதும் கைவிடவில்லை. ஒருபோதும் நம்மை கைவிடமாட்டான். இன்ஷா அல்லாஹ். தியாகங்கள் செய்ய வேண்டியது வரும். அஹ்மதிகள் அல்லாஹ்வின் அருளால் தியாகங்கள் செய்கின்றனர். ஆனால் ஒவ்வொரு தியாகமும் அல்லாஹ்வின் அருளைப் பெற்று ஒரு புதிய வழியை நமக்கு காட்டுகின்றது. அல்லாஹ் தான் வழங்குவதை ஒருபோதும் குறைப்பதில்லை.

பிறகு இறை பாதுகாப்பு கிடைப்பது என்ற அற்புதம் தொடர்பாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஒரு சம்பவத்தை கூறுகின்றார்கள். இறை பாதுகாப்பு தொடர்பான ஒரு உதாரணத்தை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாழ்க்கையிலிருந்து நான் எடுத்துக் கூறுகின்றேன்.

லாஹூரிலுள்ள சட்டக் கல்லூரியின் முதல்வரான கமர்ஸீன் சாஹிப் அவர்களின் தந்தையாருக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் மிகுதியாக தொடர்பு இருந்து வந்தது. எதுவரை என்றால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு பணம் தேவைப்படும் போது சில நேரங்களில் அவர்கள் இவர்களிடமிருந்து கடன் வாங்கி வந்தார்கள். கமர்ஸீன் சாஹிப் இந்துவாக இருந்தார்கள். அவருக்கும் ஹஸ்ரத் சாஹிபுடன் கலப்பற்ற தொடர்பு இருந்து வந்தது. ஜெஹ்லமில் நடைபெற்ற வழக்கில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தரப்பிலிருந்தும் வழக்கறிஞராக இருக்கும்படி தனது மகனுக்கு அவர்கள் தந்தி மூலம் தெரிவித்திருந்தார்கள். இதற்கு காரணம் அவர் இளைஞராக இருந்த காலகட்டத்தில் அவர் தமது சில நண்பர்களுடன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களோடு சியால்கோட்டில் இருந்து வந்தார்கள். அங்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பல அடையாளங்களை அவர் பார்த்திருந்தார். அந்த அடையாளங்களில் ஒன்று இதுவாகும்.

ஒரு நாள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது நண்பர்களுடன் சேர்ந்து இரவில் தூங்கிக் கொண்டிருந்தார்கள். அப்போது அவர்கள் விழித்தெழுந்தார்கள். அந்த வீடு ஆபத்தில் இருப்பதாக அவர்களது உள்ளத்தில் போடப்பட்டது. அவர்கள் எல்லா நண்பர்களையும் தட்டி எழுப்பினார்கள். இந்த வீடு ஆபத்தில் உள்ளது. எனவே இதிலிருந்து வெளியேறிவிட வேண்டும் என்று கூறினார்கள். எல்லா நண்பர்களும் தூங்கிக் கொண்டிருந்ததன் காரணமாக அவர்கள் கூறியதை பொருட்படுத்தாமல் இருந்தனர். இது அன்னாரது யூகமாக இருக்கிறது என்று கூறிவிட்டு தூங்கி விட்டனர். ஆனால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இருந்த அந்த உணர்வு மேலும் அதிகமாகிக் கொண்டே சென்றது. இறுதியில் மீண்டும் அவர்கள் அனைவரையும் தட்டி எழுப்பினார்கள். மேலும் கூரையிலிருந்து சட சட என்று சத்தம் வருகின்றது என்று கூறி கவனமூட்டினார்கள். எனவே வீட்டை காலி செய்து விட வேண்டும் என்றார்கள். இதற்கு அந்த நண்பர்கள், இது ஒரு சாதாரண விஷயமாகும். மரக்கட்டையை பூச்சி அரிக்கும் போது இவ்வாறான சப்தம் வரத்தான் செய்யும். நீங்கள் ஏன் எங்களுடைய தூக்கத்தை கெடுக்கின்றீர்கள் என்று கூறினர்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீண்டும் பிடிவாதமாக நான் கூறுவதை கேட்டு நீங்கள் வெளியேறி விடுங்கள் என்று கூறியதும் வேறு வழியின்றி அவர்கள் வெறியேற சம்மதித்தனர். என்னைப் பாதுகாப்பதற்காகவே இறைவன் இந்த வீட்டை விழுவதிலிருந்தும் தடுத்து வைத்துள்ளான் என்பதில் ஹஸ்ரத் சாஹிபிற்கு உறுதியான நம்பிக்கை இருந்ததால் அவர்கள் மற்றவர்களிடம் முதலில் நீங்கள் வெளியேறுங்கள். நான் பின்னால் வருவேன் என்று கூறினார்கள். அந்த அனைவரும் வெளியேறினர். பிறகு ஹஸ்ரத் சாஹிப் வெளியே வந்தார்கள். அவர்கள் வெளியில் வந்து படியில் கால் வைத்ததுமே வீட்டின் கூரை விழுந்து விட்டது.

இவ்வாறே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் இறைவன் நடந்து கொண்ட விதம் தொடர்பான இன்னொரு சம்பவமும் இவ்வாறு வருகின்றது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறி வந்தார்கள். நான் ஒரு முறை அமிர்தசரஸில் இருந்து குதிரை வண்டியில் வந்து கொண்டிருந்தேன். ஒரு தடித்த இந்துவும் குதிரை வண்டியில் என்னுடன் குதிரை வண்டியில் ஏறினார். அவர் எனக்கு முன்னதாக குதிரை வண்டியில் ஏறி அமர்ந்து கொண்டார். எதுவரை என்றால் நான் இருக்க வேண்டிய அடுத்த இருக்கையையும் அவர் ஆக்கிரமித்துக் கொண்டார். அதன் காரணமாக சிறிய இடத்தில் நான்

அமர வேண்டியது வந்தது. அந்த நாட்களில் வெயிலின் வெப்பமும் கடுமையாக இருந்தது. அதனால் மனிதனுடைய உணர்வும் செயலிழந்து போகும் நிலை ஏற்பட்டது. என்னை வெயிலின் வெப்பத்திலிருந்தும் காப்பாற்றுவதற்காக அல்லாஹ் என்ன ஏற்பாட்டைச் செய்தான் என்றால் அதற்காகவே அவன் ஒரு மேகத்தை அனுப்பினான். அது குதிரை வண்டியுடன் சேர்ந்து நிழலை ஏற்படுத்தியவாறு பட்டாலா வரை வந்தது. இந்த காட்சியை பார்த்த அந்த இந்து நீங்கள் இறைவனுக்கு பிரியமான ஒரு பெருந்தகையாக இருப்பது தெரிய வருகிறது என்று கூறினார்.

ஒரு சாதாரணமான பீருக்கும் இறைவனால் அனுப்பப்பட்ட தூதருக்கும் இடையில் நல்ல தாக்கத்தை ஏற்படுத்துவதிலும், நன்மைகளை விநியோகம் செய்வதிலும் தனது சீடர்களை சீர்திருத்துவதிலும் மனிதர்களுக்காக வேதனை அடைவதிலும் என்ன வித்தியாசம் இருக்கின்றது ? என்பதை விளக்க ஒரு உதாரணத்தை எடுத்துக் கூறியவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள். லூதியானாவைச் சேர்ந்த சூஃபி அஹ்மது ஜான் சாஹிப் அவர்களைப் பற்றி குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்.

லூதியானாவைச் சேர்ந்த முன்ஷி அஹ்மது ஜான் சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வாதம் செய்வதற்கு முன்பாகவே வஃபாத் ஆகி விட்டார்கள். ஆனால் அன்னாரது ஆன்மீகப் பார்வை எந்த அளவுக்கு கூர்மையானதாக இருந்ததென்றால் அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வாதம் செய்வதற்கு முன்பாகவே அவர்களுக்கு இவ்வாறு கடிதம் எழுதியிருந்தார்கள். நோயாளிகளாகிய எங்களது பார்வை உங்கள் பக்கம் தான் இருக்கின்றது. இறைவனுக்காக நீங்கள் மஸீஹாக ஆகிவிடுங்கள் என்று எழுதியிருந்தார்.

எனவே, வெளிப்படையான முறையில் ஆன்மீக மனிதர்கள் இறைவன் தன் தரப்பிலிருந்தும் இந்த பணிக்காக குறிப்பாக நியமித்திருக்கும் அந்த மனிதருடன் போட்டி போட முடியாது. உலகை அவர்கள் சீர்திருத்த வேண்டியதிருக்கிறது. ஆன்மீகத்தில் அதிகரிப்பு ஏற்படுத்த வேண்டியிருக்கிறது. அம்மக்களை இறைவனுக்கு அருகில் கொண்டு வர வேண்டியிருக்கிறது. இதுபற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களே இவ்வாறு கூறியுள்ளார்கள்.

எந்த பணிக்காக இறைவன் என்னை நியமித்திருக்கின்றானோ அது இதுவாகும். இறைவனுக்கும் அவனது படைப்பினங்களுக்கும் இடையில் ஏற்பட்டிருக்கின்ற மாசுகளை அகற்றி அன்பு மற்றும் கலப்பற்ற மனத்தூய்மையின் தொடர்பை மீண்டும் நிலைநிறுத்தவே நான் வந்துள்ளேன்.

மேலும் அவர்கள் கூறுகின்றார்கள். எந்த மார்க்க உண்மைகள் உலகின் பார்வையில் இருந்தும் மறைந்து விட்டனவோ அதை வெளிப்படுத்தவே நான் வந்துள்ளேன். மேலும் மன இச்சைகளின் இருள்களுக்கு கீழ் புதைந்து கிடக்கும் அந்த ஆன்மீகத்தின் முன்மாதிரியை காட்டுவதற்காக நான் வந்துள்ளேன். மேலும் அழிந்து போன அந்த கலப்பற்ற ஒளி வீசுகின்ற ஏகத்துவத்தின் செடியை மீண்டும் சமுதாயத்தில் நிரந்தரமாக நடுவதற்காக நான் வந்துள்ளேன்.

அல்லாஹ் நமக்கு நல்வாய்ப்பை வழங்குவானாக. நாம் பைஅத்திற்கான உரிமையை செலுத்தியவாறு அல்லாஹ்வுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்பவர்களாக ஆவோமாக. ஏகத்துவத்தின் உண்மையான பிரகாசத்திலிருந்தும் பங்கினை பெறக் கூடியவர்களாக நாம் ஆவோமாக. அல்லாஹ் இந்த உலகிற்கும் இவற்றை அடையாளம் கண்டு கொள்வதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தியின் இந்த வேதனையைப் புரிந்தவாறு அவர்களிடம் பைஅத் செய்கின்ற நல்வாய்ப்பையும் அல்லாஹ் முஸ்லிம் சமுதாயத்திற்கு வழங்குவானாக.

தொழுகைகளுக்குப் பிறகு ஹுஸூர் அவர்கள் இரண்டு ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைத்தார்கள். அதில் ஒரு ஜனாஸா கராச்சியிலுள்ள பொதுநல அமைப்பைச் சார்ந்த சவுத்ரி மக்ஸூத் சாஹிப் அவர்களின் மகனான நுஃமான் அஹ்மது அஞ்சும் சாஹிப் அவர்களுடையதாகும். மதிப்பிற்குரிய நுஃமான் அஹ்மது அஞ்சும் சாஹிப் அவர்களை கராச்சியில் வைத்து அஹ்மதிய்யத்தின் எதிரிகள் **2015** ஆம் ஆண்டு மார்ச் மாதம் **21** ஆம் தேதி இரவு **7.45** மணிக்கு இவரது கடைக்கு வந்து துப்பாக்கிச் சூடு நடத்தி ஷஹீதாக்கி விட்டார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

இரண்டாவது ஜனாஸா மதிப்பிற்குரிய இன்ஜினியர் பாரூக் அஹ்மது கான் சாஹிப் அவர்களுடையதாகும். இவர் பெஷாவர் மாவட்டத்தின் துணை அமீராவார்கள். இவர் மஜ்லிஸே ஷீரா (ஆலோசனைக் கூட்டத்தில்) கலந்து கொண்ட பிறகு ரப்வாவிலிருந்து பெஷாவர் சென்று கொண்டு இருந்தார். இவர் சென்ற காரின் டயர் வெடித்ததன் காரணமாக விபத்து ஏற்பட்டது. போலீஸ் இவர்களை சக்வாவிலுள்ள மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். ஆனால் அவர்களால் உயிர் பிழைக்க முடியவில்லை. இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன். அல்லாஹ் இவர்களது பாவங்களை மன்னிப்பானாக. இவர்களுடன் கருணையுடன் நடந்து கொள்வானாக.

Friday Sermon delivered by Hadrath Khaleefathul Masih Alkhamis (atba)
at Baithul Futuh,London – on 27.03.15
Tamil Translation : Moulavi. M. Rafeeq Ahmad, For Tamil Desk,Qadian.
Published By Nazarath Nashr-O-Isha’ath,Sadr Anjuman Ahmadiyya - Qadian, 143516